## சுருக்கம்

தொல்லியல் – சிவகங்கை மாவட்டம், திருபுவனம் வட்டம், கீழடியில் தொல்லியல் அகழாய்வு மேற்கொள்ளுதல் – நிதி ஒப்பளிப்பு செய்து – ஆணை வெளியிடப்படுகிறது.

### சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள்(அதொ2) துறை

அரசாணை (நிலை) எண். 17

நாள். 02.02.2018.
திருவள்ளுவர் ஆண்டு–2049,
ஹேவிளம்பி, தை–20.

படிக்கப்பட்டது:

தொல்லியல் துறை ஆணையர் அவர்களின் கடித எண். இ3/4671/2017, நாள்.10.11.2017.

******

**ஆணை:**

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், தொல்லியல் துறை ஆணையர் அவர்கள், கீழடி, சிவகங்கை மாவட்டம், திருபுவனம் வட்டத்தில் அமைந்துள்ள சிறிய கிராமமாகும் எனவும், வைகை ஆற்றங்கரையில் அமைந்துள்ள இவ்விடமானது தமிழ்நாட்டின் பண்டைய வரலாற்றை வெளிப்படுத்தும் முக்கிய பகுதியாக விளங்குகிறது எனவும், இங்கு மத்திய தொல்லியல் துறையானது 2014–15, 2015–16 மற்றும் 2016–17 ஆகிய மூன்று பருவங்களில் விரிவான அகழாய்வு மேற்கொண்டது எனவும், பள்ளிசந்தை திடல் எனும் மேடான பகுதியில் நடைபெற்ற அகழாய்வுகளில் செங்கல் கட்டுமானங்கள், உறைகிணறுகள், சுடுமண் பொம்மைகள், அரிய கல்மணிகள், யானை தந்தத்தினால் ஆன பொருட்கள், பழங்கால காசுகள், தமிழ் பிராமி எழுத்துப் பொறிப்பு பெற்ற பானை ஓடுகள், பல்வகை சுடுமண் பாத்திரங்கள் மற்றும் பிற அரிய தொல்பொருட்கள் கிடைக்கப்பெற்றன எனவும், இக்கண்டுபிடிப்புகள் வைகையாற்றின் நாகரிகத்தை வெளிப்படுத்தும் விதமாகவும் பண்டைய தமிழ் மக்களின் சமூக, பொருளாதார, கலை மற்றும் கலாச்சாரத்தை பிரதிபலிப்பவையாகவும் அமைந்துள்ளன எனவும், தற்போது மாநில தொல்லியல் துறையால் அகழாய்வு செய்திட, மத்திய அரசின் (CABA) அனுமதி பெறப்பட்டுள்ளது எனவும் தெரிவித்து, மேற்குறிப்பிட்ட தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு, இங்கு அமையப் பெற்றிருக்கும் தமிழகத்தின் பண்டைய கலாச்சாரத்தின் கூறுகளை முழுவதுமாக வெளிக்கொணரும் நோக்கில் ஒரு விரிவான அகழாய்வு மேற்கொள்ள ரூ.55 இலட்சம் ஒப்பளிப்பு செய்து, அத் தொகையினை முன் பணமாகப் பெற அனுமதி வழங்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

(த.பி.பா)

2. தொல்லியல் துறை ஆணையரின் கருத்துருவினை ஏற்று, சிவகங்கை மாவட்டம், திருபுவனம் வட்டம், கீழடி என்ற இடத்தில் தமிழகத்தின் பண்டைய கலாச்சாரத்தின் கூறுகளை முழுவதுமாக வெளிக் கொணரும் நோக்கில் ஒரு விரிவான அகழாய்வு மேற்கொள்ள கீழே குறிப்பிடப்பட்டுள்ள செலவின விவரப்படி ரூ.55,00,000/– (ரூபாய் ஐம்பத்தைந்து இலட்சம் மட்டும்) நிதி ஒதுக்கீடு செய்து அரசு ஆணையிடுகிறது :-

| வ. எண் | பணி விவரம் | ரூபாய் இலட்சத்தில் |
|---|---|---|
| 1) | அகழாய்வுப் பணி மேற்கொள்ள ஆள் கூலி மற்றும் அகழாய்வு மேற்கொண்ட குழிகளை நிரப்ப | ரூ.39.50 |
| 2) | அகழாய்விற்கு தேவையான பொருட்கள் மற்றும் தொல்பொருட்களை கொண்டு வருவதற்கு போக்குவரத்துச் செலவினங்கள் | ரூ.3.00 |
| 3) | அகழாய்வுப் பணிக்கு தேவையான தொழில்நுட்ப கருவிகள் | ரூ.4.00 |
| 4) | தொல்பொருட்கள் காலக் கணக்கீட்டு முறை | ரூ.4.00 |
| 5) | நிழற்படங்களை ஆவணப்படுத்துதல் மற்றும் தொல்பொருட்கள் காட்சிப்படுத்துதல் | ரூ.1.50 |
| 6) | அகழாய்வுக்கு தேவையான எழுது பொருட்கள் வாங்குவதற்கு | ரூ.1.00 |
| 7) | அகழாய்வு முகாமிற்கு தேவைப்படும் பொருட்கள் வாங்குவதற்கு (நாற்காலி, மேசை, மின் விளக்கு, மின்விசிறி மற்றும் இதர பொருட்கள்) | ரூ.1.50 |
| 8) | சில்லறை செலவினங்கள் | ரூ.0.50 |
| | மொத்தம் | ரூ.55.00 |

3. மேலே பத்தி 2–ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை முன்பணமாக பெற தொல்லியல் துறை ஆணையருக்கு அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது. மேலும், பெறப்படும் முன்பணம் உடனுக்குடன் அரசுக் கணக்கில் உரிய பட்டியல்கள் / இரசீதுகளுடன் சரிகட்டப்பட வேண்டும் எனவும் அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 2–ல் ஒப்பளிக்கப்பட்ட தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படவேண்டும்:–

> 2205–00 கலையும் பண்பாடும் – 103 தொல் பொருளியல் ஆய்வு – மாநிலச் செலவினங்கள் – AB பழங்காலச் சின்னங்கள் முதலியவற்றைப் பழுதுபார்த்தல், புதுப்பித்தல், பராமரித்தல் மற்றும் தொல்பொருள் புதையுண்ட இடங்களை அகழ்ந்தெடுத்தல் – 42 பணி அல்லது பொறுப்பேற்ற செலவுகள்.
>
> (த.தொ.கு.2205 00 103 AB 4201)

5. மேலே பத்தி–2 இல் குறிப்பிட்டுள்ள செலவினம் ஒரு "புது துணைப் பணி" (NEW INSTRUMENT OF SERVICE) குறித்ததாக கருதப்படும். துணை மதிப்பீடுகளில் இச்செலவினம் சேர்க்கப்பட்டு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் நாளடைவில் பெறப்படும். சட்டபேரவையின் ஒப்புதல் பெறப்படும் வரை இச்செலவினம் முதற்கண் எதிர்பாரா செலவு நிதி (Contigency Fund) முன்பணம் மூலம் மேற்கொள்ளப்படும் எதிர்பாரா செலவு முன்பணம் ஒப்பளிப்புக்கான ஆணைகள் நிதி (வரவு செலவு பொது–I) துறையில் தனியாக வெளியிடப்படும். அடுத்த துணை மானியக் கோரிக்கை வரை தேவைப்படும் சரியான தொகையினை கணக்கிட்டு அதனை எதிர்பாரா செலவு நிதியிலிருந்து முன்பணமாக பெறுவதற்கு விண்ணப்பத்தை உரிய படிவத்தில் இவ்வரசாணையின் நகலுடன் இருபடிகளில் நிதி (வரவு செலவு பொது–I) துறைக்கு சமர்ப்பிக்குமாறு தொல்லியல் துறை ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார். மேலும், இச்செலவினத்தை 2017–2018 ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்குரிய கருத்துருவினை உரிய நேரத்தில் தவறாது அரசுக்கு அனுப்பிட தொல்லியல் துறை ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

6. இவ்வாணை நிதித் துறையின் அ.சா.எண்.144/ADS(PK)/2018, நாள்.01.02.2018–ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண்.2637 (இரண்டாயிரத்து அறுநூற்று முப்பத்தி ஏழு).

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ஆர். வெங்கடேசன்,**
**அரசு முதன்மைச் செயலாளர் (பொ).**

பெறுநர்
ஆணையர் (மு.கூ.பொ), தொல்லியல் துறை, சென்னை – 8.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–35.
முதன்மை மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை – 18.
மாநில கணக்காய்வுத் தலைவர், (க & ப / தணிக்கை) சென்னை – 18.
உள்ளூறை தணிக்கை அலுவலர் (பொது/சமூக பகுதி தணிக்கை), சென்னை–9

நகல்:
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அலுவலகம், சென்னை–9,
மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9
மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை –9.
நிதித் (கல்வி –II/வ.செ.பொது –II/ வ.செ.பொது –I) துறை, சென்னை –9.
அரசு முதன்மைச் செயலாளரின் முதுநிலை தனிச் செயலர்,
சுற்றுலா, பண்பாடு (ம) அறநிலையங்கள் துறை, சென்னை–9.
இருப்பு கோப்பு / உதிரி நகல்.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

பிரிவு அலுவலர்.